**செய்தி வெளியீடு எண் : 1411** **நாள் : 17.07.2023**

# செய்தி வெளியீடு

## நாட்டு முயல்கள் பெருமளவில் வேட்டையாடுவது தமிழ்நாடு வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டு மையத்தால் தடுக்கப்பட்டது

தமிழ்நாடு வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டு மையத்தின் (TNFWCCB) புலனாய்வுக் குழுவினர், ஈரோடு மாவட்டம் பெருந்துறை தாலுகாவில் பெருமளவில் சட்டவிரோதமாக நாட்டு முயல்களை வேட்டையாட நடைபெற்ற முயற்சியை தடுத்துள்ளனர். 16.07.2023 அன்று அதிக அளவில் நாட்டு முயல்களை சட்டவிரோதமாக வேட்டையாட ஒரு கும்பல் கூட உள்ளது எனக் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், திரு.ராமசுப்ரமணியன், இ.வ.ப., கள இயக்குநர், ஆனைமலை புலிகள் காப்பகம், திரு.ராஜ்குமார், வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் ஆகியோர் தலைமையில் அமைக்கப்பட்ட இக்குழுவில் ஈரோடு மாவட்ட வன அலுவலர் திரு.வெங்கடேஷ் பிரபு, இ.வ.ப., வன பாதுகாப்புப்படை உதவி வனப் பாதுகாவலர் திரு.மகேந்திரன் தமிழ்நாடு வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டு மையம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு வனச்சரக அலுவலர்கள், வனக் காவலர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. வேட்டையாடும் கும்பலுக்குள் ஒரு ரகசிய தகவல் கொடுப்பவரை வைத்து, இந்த நடவடிக்கையை முடக்க முடிவு செய்யப்பட்டது. அவர் அளித்த ரகசிய தகவலின் அடிப்படையில் பெருந்துறை அருகே 200-க்கும் மேற்பட்ட கும்பல் நாட்டு முயல்களை வேட்டையாட திட்டமிடுவது தெரிய வந்தது. இந்த கும்பல் பல்வேறு சமூக ஊடக தளங்கள் மூலம் இந்த வேட்டையாடுதலுக்கு நபர்களை வரவழைப்பதும் தெரிய வந்தது. வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று நாட்டு முயல்களை வேட்டையாடும் முயற்சியை முற்றிலும் தடுத்து நிறுத்தினர்.

இக்குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 100-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, 63 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. வனவிலங்கு பாதுகாப்பு சட்டம், 1972ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்னர் இணக்க கட்டணம் வசூலிக்கப்பட்டு இக்குற்றச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். தமிழ்நாடு வனத்துறையின் இந்த குற்ற தடுப்புச் சம்பவம் அப்பகுதியிலுள்ள மற்ற கிராமங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வனவிலங்கு பாதுகாப்புக்கு உதவியாக அமைந்தது.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in